## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2017 டிசம்பர்

## கிறிஸ்தவம் I & II      மூன்று மணித்தியாலம்

# கிறிஸ்தவம் I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

1. இறைவனின் தூதுவர் என அழைக்கப்படுபவர்கள்,
   (1) பரிசேயர்    (2) இறைவாக்கினர்
   (3) சனகரின் சங்க அங்கத்தினர்    (4) லேவியர்

2. இயேசு கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய இறைவாக்கு நிறைவு பெற்றது,
   (1) மெசியாவின் வருகையுடனாகும்    (2) திருமுழுக்கு யோவானின் வருகையுடனாகும்
   (3) தீய செயல்களின் முடிவுடனாகும்    (4) உரோம வல்லரசின் வருகையுடனாகும்

3. ''அவரது பிறப்பால் பலர் மகிழ்ச்சி அடைவர்'' இங்கு குறிப்பிடப்படுவது
   (1) இயேசுவானவரின் பிறப்பு பற்றியாகும்
   (2) மோசேயின் பிறப்பு பற்றியாகும்
   (3) சாமுவேலின் பிறப்பு பற்றியாகும்
   (4) திருமுழுக்கு யோவானின் பிறப்பு பற்றியதாகும்

4. சிமியோனும் அன்னாவும் முக்கியத்துவம் பெறுவது, அவர்கள்
   (1) இறைவாக்கினர் என்பதாலாகும்
   (2) எருசலேம் தேவாலயத்தில் வாழ்ந்தபடியாலாகும்
   (3) குழந்தை இயேசுவை மெசியாவென இனங்கண்டு வெளிப்படுத்தியபடியாலாகும்
   (4) அடிக்கடி உபாவாசமிருந்து செபம் செய்த பக்தர்கள் என்பதாலாகும்

5. ''இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும், உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்'' இவ்வசனத்திலிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் செய்தி
   (1) அனர்த்தங்கள் ஏற்படும்போது உணவு போன்றவற்றைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்பதாகும்.
   (2) நம்மிடம் வரும் ஏழைகள் பற்றித் துயரம் கொள்ளல் வேண்டும் என்பதாகும்.
   (3) பகிர்ந்து கொடுப்பதன் மூலம் கிறிஸ்துவிற்கு பணி செய்ய வாய்ப்பு கிட்டுகின்றது என்பதாகும்.
   (4) ஆடைகள் தேவைப்படும் அயலவர்களுக்கு இரண்டு ஆடைகள் கொடுக்க வேண்டும் என்பதாகும்.

6. ‘‘ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவதுபோல் உங்களை நான் அனுப்புகிறேன்’’. இதன் மூலம் இயேசுவானவர் எழுபது பேருக்கு கூறியது
   (1) சமுதாயத்தில் அனைவரும் தீயவர் என்று காண்பிப்பதற்காகும்
   (2) மறைத்தூதுப் பணியில் முகங்கொடுக்க வேண்டிய கடினமான சூழ்நிலைகளை விளக்குவதற்காகும்.
   (3) சமுதாயத்தில் அசுத்த ஆவி பிடித்தவர்களும் ஒடுக்கப்பட்டவர்களும் நிறைந்துள்ளர் என்று காண்பிப்பதற்காகும்.
   (4) ஆடுகளைப்போல குற்றமற்றவர்களாக செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்குவதற்காகும்

7. சட்டங்களுக்கு அப்பால் மனித நேயம் முக்கியமென்பதை பரிசேயருக்கு எடுத்துக்காட்டிய நிகழ்வு
   (1) சபத் தினத்தில் கை சூம்பியவர் நலமடைதல்
   (2) லேவியை அழைத்தல்
   (3) குருடனாகிய பர்திமேயுவைக் குணப்படுத்தல்
   (4) நூற்றுக்கதிபதியின் பணிவிடையாளர் குணப்படுதல்

8. இறையரசின் கொள்கைகள் பற்றி மக்களுக்கு கற்றுக் கொடுப்பதற்காக உபயோகித்த உவமைகள்
   (1) காணாமற்போன மகன், தாலந்து (மினா நாணயம்) என்பனவாகும்
   (2) நல்ல சமாரியர், பெரிய விருந்து என்பனவாகும்
   (3) காணாமற்போனவர்களைத் தேடிச் செல்லல், பெரிய விருந்து என்பனவாகும்
   (4) பரிசேயரும் வரிதண்டுபவரும், காணாமற்போன காசு என்பனவாகும்

9. ‘‘இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி செயல்படுகின்றவர்களே என் தாயும் என் சகோதரர்களும் ஆவார்கள்’’ இதிலிருந்து இயேசுவானவர் வெளிப்படுத்துவது,
   (1) இறைவார்த்தைக்குச் செவிமடுப்பதன் முக்கியத்துவம் பற்றியாகும்
   (2) இறையரசின் பண்புகளை செயற்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றியாகும்
   (3) குடும்பங்களை உருவாக்கியவர் படைப்பின் கடவுள் என்பதாகும்
   (4) இரத்த உறவுதாண்டி குடும்பங்கள் பற்றிய புதிய எண்ணக்கரு தாபித்தல் பற்றியாகும்

10. ‘‘செல்வர்களே உங்களுக்கு ஐயோ! உங்களுக்குக் கேடு!...’’ இவ்வசனத்தை நிறைவு செய்யும் சரியான சொற்றொடர்
   (1) ஏனெனில் நீங்கள் எல்லாம் அனுபவித்து விட்டீர்கள்
   (2) நீங்கள் பட்டினியாயிருப்பீர்கள்
   (3) நீங்கள் போலியான புகழ்ச்சிக்குரியவர் ஆவீர்கள்
   (4) நீங்கள் அழுது புலம்புவீர்கள்

11. ஒருவரின் சொந்த தேவைகள் பற்றி கவலை கொள்வது வீணானது என்று விளக்க, இயேசுவானவர் முன்வைத்த இரண்டு உருவகங்களாவன
   (1) பூமியின் உப்பும் ஒளியும்
   (2) காட்டுமலர்ச்செடிகளும் வானத்துப் பறவைகளும்
   (3) ஏழைப் பெண்ணொருவர் இரண்டு காசுகளையும் காணிக்கையாக செலுத்துதல்
   (4) இருவகை அத்திவாரங்கள்

12. ஆபிரகாமின் வாழ்விலிருந்து கிறிஸ்தவர் பின்பற்றக்கூடிய முக்கியமான குணாதிசயம்
   (1) உறுதியான விசுவாசத்துடன் இறைவனின் அழைப்பை ஏற்றல்
   (2) சமுதாய விழுமியங்களைப் பாதுகாக்க உழைத்தல்
   (3) தனது இலட்சியங்களை முறையாக நிறைவு செய்தல்
   (4) பிறரை ஆசீர்வதித்து காலத்தைச் செலவிடுதல்

13. பவுலின் வாழ்விலிருந்தும் திருத்தூதுப் பணிகளிலிருந்தும் ஒரு கிறிஸ்தவர் **பின்பற்றக்கூடாதது**
   (1) தைரியத்துடனும் விடாமுயற்சியுடனும் சான்று பகர்தல்
   (2) துன்பங்களின் மத்தியிலும் இறைவனைப் போற்றுதல்
   (3) யோவான் மாற்குவை இரண்டாவது திருத்தூதுப் பிரயாணத்தில் சேர்த்துக் கொள்ளாதிருத்தல்
   (4) இறைவனுக்குச் செவிகொடுத்தலும், நீதிக்காக குரல் கொடுத்தலும்

14. ''என் இல்லம் இறைவேண்டலின் வீடு என்று மறை நூலில் எழுதியுள்ளதே: ஆனால் நீங்கள் இதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்'' இக்கூற்றிலிருந்து இயேசுவானவர் முன்வைக்கும் உண்மையாவது,
   (1) ஏமாற்றுக்காரரையும் பாவிகளையும் ஆலயத்திற்குள் வராமல் தடுத்தல் வேண்டும் என்பதாகும்
   (2) ஆலயங்கள் பொது வழிபாட்டிற்கு மட்டும் திறக்கப்படல் வேண்டும் என்பதாகும்
   (3) உண்மையோடும் ஆவியோடும் வழிபட வேண்டிய இடம் ஆலயம் என்பதாகும்
   (4) ஆலயத்தை எப்போதும் சமுதாயப் பணிகளுக்கென திறந்துவிடுதல் வேண்டும் என்பதாகும்

15. இயேசுவானவரைப் பற்றிய சரியான புரிந்துணர்வை சீடர்கள் பெற்றுக் கொள்வதற்கு உதவியாயிருந்த முக்கிய நிகழ்வு
   (1) இயேசுவானவரின் திருமுழுக்கு
   (2) சோதனைகளில் வெற்றியடைந்தமை
   (3) கெத்சமனே தோட்டத்தில் செபித்தமை
   (4) இயேசுவானவரின் தோற்றம் மாறியமை

16. இயேசுவானவர் தமது திருப்பணி பற்றி முதலாவதாக வெளிப்படுத்திய நிகழ்வு
   (1) மலைப்பொழிவு
   (2) சோதனைகளுக்கு முகங்கொடுத்த போது
   (3) மீன் பிடிப்போரை அழைத்த போது
   (4) நாசரேத்து தொழுகைக்கூட போதனையின் போது

17. பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொள்க
   A – தேவைகள் உள்ளோருக்காக மனம் வருந்துதல்
   B - இனம், மொழி என்பவை தாண்டி உதவிசெய்தல்
   C – ஒருவர் தனது பொருள், நேரம், வளங்கள் என்பவற்றைப் பிறருக்காகச் செலவு செய்தல்
   D – தனது சொந்த செயற்பாடுகளுக்கு இடையூறு விளையாமல் செயற்படுதல்

   (1) A,B (2) A,D (3) B,C (4) C,D

18. நல்ல ஆயரான கிறிஸ்தவ தலைவர்கள் மத்தியில் **இருக்கக்கூடாத** குணாதிசயமாவது
   (1) காணாமற் போனோரைத் தேடிச் செல்லல்
   (2) அன்போடும் அர்ப்பணிப்போடும் மந்தையைப் பராமரித்தல்
   (3) தனது மந்தையிலிருந்து இலாபத்தை பெறுதல்
   (4) தனது சேவையில் அர்ப்பணிப்புடன் தமது பொறுப்பிலிருப்போரைப் பாதுகாத்தல்

19. ஒரு குடும்பத்தில் இருக்க வேண்டிய பொறுப்புகளும், கடமைகளும் கீழே தரப்பட்டுள்ளன

A – கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் சமமானவராகவும், அன்புடனும் நடத்ததல்

B – தனது பிள்ளைகள் பிழை செய்தாலும் அவர்களைப் பிழையற்றவர்களென கூறுதல்

C – பிள்ளைகள் பெற்றோரை மதித்து கீழ்ப்படிதல்

D – அயலவருடன் ஒப்பிட்டு தனது குடும்பம் மேலானது என்று கூறுதல்

(1) Aயும் Bயும் (2) Aயும் Cயும் (3) Bயும் Cயும் (4) Cயும் Dயும்

20. "ஆண்டவர் உண்மையாகவே எழுப்பப்பட்டார்" இவ்வாறு கூறி புது நம்பிக்கையை ஏற்படுத்தியவர் / ஏற்படுத்தியவர்கள்

(1) எம்மாவூர் சென்ற இரண்டு சீடர்கள் (2) கல்லறைக்குச் சென்ற பெண்கள்
(3) மகதலா மரியா (4) ஏனைய சீடர்களிடம் சென்ற பேதுரு

21. ஆன்மீக குறைபாடுகளை ஒழிப்பதற்கு கிறிஸ்தவர்கள் செய்ய வேண்டியது

(1) செல்வத்தை முறையாகப் பகிர்ந்து கொடுப்பதற்குச் செயற்படுதல்
(2) தினமும் சமயச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்
(3) விண்ணக சொத்தைப் பெற்றுக் கொள்வதில் மனதை ஈடுபடுத்தல்
(4) உலகம் சார்ந்த (லௌகீக) வாழ்க்கையின் மூலம் ஆன்மீகத்தை வெளிக்காட்டுதல்

22. இயேசுவானவரின் பாடுகளையும் மரணத்தையும் பற்றிய உண்மைகளைப் புரிந்து சான்று பகர்ந்தவர் / பகர்ந்தவர்கள்

(1) போர் வீரர்கள் (2) அரிமத்தியாவின் யோசேப்பு
(3) எருசலேமின் பெண்கள் (4) சிரேனியூர் சீமோன்

23. இன்று சமுதாயத்தில் நீதியை உதாசீனம் செய்து, தமது மனச்சாட்சிக்கு விரோதமாகச் செயற்பட்டு மக்களின் மத்தியில் பிரபல்யம் அடைவதற்கெனச் செயற்படுவோர் ஒப்பிடப்படுவது

(1) பேதுருவுடன் (2) ஆளுநர் பிலாத்துவுடன்
(3) திருமுழுக்கு யோவானுடன் (4) மகதலா மரியாவுடன்

24. இயேசுவானவரின் மறுவருகை பற்றி கிறிஸ்தவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கற்பித்தல்

(1) இடைக்கச்சையைக் கட்டிக்கொண்டு, விளக்கை ஏற்றி வைத்திருங்கள்
(2) வீட்டில் திருட வந்த கள்வனைப்போல் அல்லாது முன்னறிவித்த பின்பே வருவார்
(3) வரும் வேளையும் நாளும் திருமறையில் எழுதப்பட்டடுள்ளது
(4) ஒவ்வொருவரும் தமது சொந்தச் செயல்களின்படி அல்ல, சமுதாயமாக பொதுவில் தண்டனை அனுபவிப்பர்

25. பவுலின் போதனையின்படி, எப்போதும் நிலைத்திருக்கும் மிக உன்னதமான சத்திய நெறியாவது

(1) இறைவாக்கு உரைத்தல் (2) அந்நிய மொழிகளில் பேசுதல்
(3) பொறுமையாயிருத்தல் (4) அன்பு செய்தல்

26. கீழ் தரப்பட்டுள்ளவற்றைக் கருத்திற்கொள்க

A – தாழ்மையான உள்ளத்துடன் துன்பங்களை ஏற்றுக் கொள்வார்

B – அரசாட்சிக்குரிய பாத்திரத்தைத் தொடங்குவார்

C – அவரின் மரணம் பாவமன்னிப்பிற்கான பலியாகும்

D – அழகான தோற்றமுடையவர் ஆவார்

இவற்றில் இறைவாக்கினர் ஏசாயா கூறுவதின்படி துன்புறும் பணியாளர்களிடம் காணப்படும் குணாதிசயங்களாவன

(1) Aயும் Bயும் (2) Aயும் Cயும் (3) Aயும் Dயும் (4) Bயும் Dயும்

27. மன்னித்தல் பற்றி இயேசுவானவரின் போதனையாவது,
   (1) எல்லையின்றி மன்னிக்கவும்: மன்னிப்பைப் பெறுவதற்கு பிறரை மன்னிக்க வேண்டும்
   (2) சகோதரர்களை ஏழு முறை மன்னித்தல் போதுமானது
   (3) செபத்தின் மூலம் பாவமன்னிப்பு கேட்டல் அவசியமற்றது
   (4) மன்னிக்கும் போதெல்லாம் நிபந்தனைகள் விதிக்க வேண்டும்

28. நிலையான வாழ்வு என்னும் நித்திய ஜீவனைப் பற்றிய கிறிஸ்தவரின் எதிர்ப்பார்ப்பு நிறைவேறுவதற்கு
   (1) நீதியான வாழ்வு, இயேசுவுடன் இணைதல், நிறைவான மகிழ்ச்சி என்பன அவசியம்
   (2) தூய்மை, நீதி, பகிர்ந்துக்கொள்ளல் என்பன அவசியம்
   (3) இறை மகிமைப் பற்றி மேலான மகிழ்ச்சியும் தூய்மையும் நீதியும் இருக்க வேண்டும்
   (4) இயேசுவுடன் இணைதல், நீதி, மன்னித்தல் என்பன அவசியம்

29. ஆதிச் திருச்சபையில் காணப்பெற்ற நற்பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன
   A – யாவற்றையும் பொதுவாகப் பேணியமை
   B – திருத்தொண்டர் குழுவொன்றை நியமித்தமை
   C – இறை வார்த்தையைப் போதிப்பதில் ஈடுபட்டமை
   D – ஒரே மனதுடன் செபத்தில் தரித்திருந்தமை
   இவற்றுள் சமத்துவத்தைப் உறுதிப்படுத்துவதற்கென எடுக்கபட்ட் வழிமுறைகள்

   (1) A, B    (2) A, C    (3) A, D    (4) B, D

30. ஆன்மீக தாகத்திற்கு வாழ்வு தரும் தண்ணீரைப் பெற்றுக் கொடுத்து, இறையரசிற்கு வழிகாட்டிய ஒரு நிகழ்வு
   (1) சமாரிய பெண்ணுடன் இயேசுவானவரின் உரையாடல்
   (2) மத்தேயுவை அழைத்தபோது இடம்பெற்ற உரையாடல்
   (3) பேதுரு மறுதலித்தல்
   (4) நிக்கதேமுவுடன் இயேசுவானவரின் உரையாடல்

31. இயேசுவானவர் மக்களைச் சந்தித்த இடங்கள், அழைப்புகள் மற்றும் மக்களின் துலங்கள் என்பன கீழே தரப்பட்டுள்ளன

| | **இடம்** | **அழைப்பு** | **துலங்கள் / பிரதிச் செயல்** |
|---|---|---|---|
| A | நாசரேத்து செபாலயம் | இறை பணிக்கு | மக்கள் செபாலயத்திற்குள்ளேயே தரித்திருத்தல் |
| **B** | திபேரியா ஏரி அருகே | மக்களுக்குப் போதித்தல் | அனைவரும் போதனைகளைக் கேட்டுக் கொண்டு மட்டும் இருத்தல் |
| C | இயேசுவானவர் இருந்த அதே இடத்தில் | 12 சீடர்களுக்கும் 70 பேருக்கும் | ஆண்டவர் பெயரில் புறப்பட்டுச் செல்லல் |
| D | கலிலேயாக் கடல் அருகில் | பேருவுக்கு கொடுத்த சவால் | இயேசுவின் சீடராகுதல் |

இவற்றில் கிறிஸ்தவப் பணியில் ஈடுபடும் நீங்கள் **செய்யக்கூடாத** துலங்கள் யாவை?

   (1) A, B    (2) A, C    (3) B, D    (4) C, D

32. புயல் காற்றின் மத்தியில் பவுல் கைதியாக இருந்தாலும் அவரின் செயற்பாட்டு முறைகளில் இருந்து நாம் பெற்றுக்கொள்ளும் முன்மாதிரியானது
(1) நாமும் வாழ்வின் புயல்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்
(2) வாழ்வின் பிரச்சினைகளின் மத்தியிலும் ஆண்டவருக்கு சான்று பகர வேண்டும்
(3) மாலுமிகளினதும் அதிகாரிகளினதும் தீர்ப்பு சரியென ஏற்றுக்கொள்ள வேண்டும்
(4) ஆண்டவர் எப்போதும் தரிசனக் காட்சிகளின் மூலம் பேசுகின்றார் என்பதாகும்

33. கலாத்திய சபைக்கு பவுல் எழுதிய திருமுகத்தின் மூலம் அவர் இன்றைய இளைஞர்களுக்கு விடுக்கும் சவால்
(1) குரோதம், பொறாமை, மதுபானம், சூது என்பவற்றிலிருந்து விலகியிருத்தல்
(2) தன்மீது அன்பு செலுத்துபவர்களுடன் மட்டும் பொறுமையுடனும் பரிவுடனும் நடந்து கொள்ளல்
(3) தன்மீது இரக்கம் காட்டுபவர்களை மன்னித்தல்
(4) குற்றங்களைச் செய்யத் தூண்டும் சமவயதினரிடமிருந்து விலகியிருத்தல்

34. பன்மை சமுதாயத்தில் ஒற்றுமையுடன் சகவாழ்வு வாழும் கிறிஸ்தவனுக்கு **அவசியமற்றது**
(1) பிற மத, பிற இன மக்களுடன் அவர்களின் விழாக்களில் பங்குபற்றுதல்
(2) கலாச்சார விழாக்கள் போன்றவற்றில் கிறிஸ்தவ அடையாளத்தைப் பாதுகாத்துக் கொள்ளல்
(3) அனைத்து சமயங்களும் ஒன்றேயாகும் என ஏற்றுக்கொள்ளுதல்
(4) சமுதாய நலன்புரி பணிகளில் யாவருடனும் சேர்ந்து செயற்படுதல்

35. பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொள்க
A – புதிய வாழ்வைப் பற்றி பெருமிதம் கொள்ளல்
B - இறைவார்த்தைக்குச் செவிசாய்த்து, ஆவியானவரின் பலத்திலிருந்து செயல்படுதல்
C – துன்பங்களின் மத்தியிலும் தைரியமாக சவால்களுக்கு முகங்கொடுத்தல்
D – தான் எடுக்கும் தீர்மானங்கள் எப்போதும் இறை சித்தத்திற்கு ஏற்புடைவை என நினைத்தல்

இவற்றில் மெய்வாழ்விற்கான மாற்றத்தின் அனுபவத்தைப் பெற்ற பவுலிடமிருந்து கிறிஸ்தவர் பெறும் முன்மாதிரி

(1) A,B (2) A,D (3) B,C (4) B,D

36. வண.மைக்கல் லெப்ஸ்லி ஏன் முக்கியத்துவம் வாய்ந்தவராக உள்ளார்?
(1) தென் ஆபிரிக்காவில் கருப்பு வெள்ளை இன மக்கள் மத்தியில் சமாதானத்திற்காகப் போராடியமையினால்
(2) அமெரிக்காவில் கருப்பு வெள்ளை இனவெறிக்கு எதிராக எழுந்தமையினால்
(3) மக்களை தூயவாழ்விற்கு இட்டுச்சென்றமையால்
(4) ஏழைகளின் வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு செயற்பட்டமையால்

37. இயேசுவானவரைப் பின்பற்றுபவர்கள் சுகபோக வாழ்வை எதிர்பார்க்கக் கூடாதென காண்பிக்கப்படுவது எந்த வெளிப்படுத்தலின் மூலமாகும்?
(1) கலப்பையில் கைவைத்த பின்னர் திரும்பிப் பார்த்தல் இறையரசிற்கு ஒவ்வாது
(2) மரித்தவர்களை அடக்கம் செய்வது எமது கடமையொன்றாகும்
(3) நரிகளுக்குக் குழிகளும், பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு. மனித குமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை
(4) முதலில் 'குடும்பத்தினரிடம் விடை பெற்று' பின்னர் உம்மைப் பின்பற்றுகிறேன்

38. ‘‘நீ செய்த தவறுக்கு நான் மன்னிப்பு வழங்குகின்றேன்’’ என்று கூறி, இயேசுவானவரின் உன்னத பண்பை செயலில் காட்டிய அண்மைக்கால மனிதர் ஒருவர்
   (1) இரண்டாம் ஜுவாம் பவுல் பாப்பாண்டவர்
   (2) மறைதிரு சந்திரா பர்னாந்து
   (3) மறைதிரு திஸ்ஸ பாலசூரிய
   (4) திரு. நெல்சன் மண்டேலா

39. இயேசுவின் நண்பர் என்னும் ரீதியில் நாம் துன்பங்களுக்கு முகங்கொடுக்கும்போது எமது பிரதிச்செயலாக இருக்கவேண்டியது
   (1) இந்நிலையை மாற்றுவதற்கு முடியுமானவற்றைச் செய்தல்
   (2) ‘‘இறை சித்தம் ஆகட்டும்’’ என்று கூறி செபித்தல்
   (3) எமக்கு உதவுபவர்களுடன் நல்லுறவு கொள்ளல்
   (4) எமது சொந்த பலத்தின் மூலம் அவற்றைத் தாங்கிக் கொள்ளல்

40. ‘‘அவர்களோ தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும், தங்கள் ஈட்டிகளைக் கருக்கரிவாள்களாகவும் அடித்துக் கொள்வர்.’’ மீக்கா இறைவாக்கினர் இதன் மூலம் விளக்குவது
   (1) போர் முடிந்துவிட்டது என்பதாகும்
   (2) போர் ஆயுதங்களுக்கு பதிலாக விவசாயக்கருவிகளின் மூலம் செழிப்பான வாழ்வு வாழலாம் என்பதாகும்
   (3) அழிவின் யுத்தங்களுக்கு வாளும் ஈட்டியம் தேவை என்பதாகும்
   (4) விவசாயம் சார்ந்த பொருளாதாரம் மிக முக்கியம் என்பதாகும்

**கிறிஸ்தவம் I - விடைகள்**

| வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | **2** | 11. | **2** | 21. | **3** | 31. | **1** |
| 02. | **1** | 12. | **1** | 22. | **2** | 32. | **2** |
| 03. | **4** | 13. | **3** | 23. | **2** | 33. | **1** |
| 04. | **3** | 14. | **3** | 24. | **1** | 34. | **3** |
| 05. | **3** | 15. | **4** | 25. | **4** | 35. | **3** |
| 06. | **2** | 16. | **4** | 26. | **2** | 36. | **1** |
| 07. | **1** | 17. | **3** | 27. | **1** | 37. | **3** |
| 08. | **3** | 18. | **3** | 28. | **3** | 38. | **1** |
| 09. | **4** | 19. | **2** | 29. | **3** | 39. | **2** |
| 10. | **1** | 20. | **1** | 30. | **1** | 40. | **2** |

மொத்தப் புள்ளிகள் - 01 x 40 = 40 புள்ளிகள்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண)ப் பரீட்சை, 2017 டிசம்பர்

## கிறிஸ்தவம் II

* **முதலாம் வினாவுக்கும்**, **மேலும் நான்கு** வினாக்களுக்குமாக **மொத்தம் ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

---

**1.**

I. **“காரிருள்** நடந்துவந்த மக்கள் **பேரொளியைக்** கண்டார்கள்”. இதில் தடித்த எழுத்தில் குறிப்பிடப்பட்டுள்ள **இரண்டு** சொற்களும் எவற்றைக் குறிப்பிடுகின்றன ?

காரிருள் - ஏழ்மை, பாவம், தவறான செயல்கள், ஒதுக்கப்பட்டவர்கள், அடிமைத்தனம்

பேரொளி - இயேசு கிறிஸ்து, இறைமகன், மெசியா, இரட்சகர், கர்த்தர்

II. திருமுழுக்கு யோவானின் வாழ்விலிருந்து நாம் பின்பற்றக்கூடிய இரண்டு குணாதிசயங்களான தாழ்மையும் தைரியமும் வெளிப்படுத்தப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தை முன்வைக்க.

தாழ்மை – அவரின் மிதியடிவாரை அவிழ்க்கின்றதற்கு எனக்குத் தகுதியல்ல.
(லூக்கா 3 : 16இன் படி எழுதியிருப்பினும் புள்ளி வழங்கப்படும்)

தைரியம் - ஏரோது அரசனின் தவறை உணர்த்தியது, பரிசேயரை கண்டித்தது, தன்னிடம் வந்தவர்களுக்கு அதிகாரத்துடன் போதித்தல்,
(போதனைகள் எழுதியிருப்பினும் புள்ளி வழங்கப்படும்)

III. மெசியா பற்றிய கொள்கையுடன் தொடர்புள்ள **இரண்டு** சிறப்பம்சங்களை எழுதுக.

மெசியா பற்றிய சிறப்பம்சங்கள்
தாவீது அரச வழி மரபு, சதாகால மெசியா, நேர்மையும் நீதியும் நிலைநாட்டல், நுகத்தை உடைத்தெறிந்து விடுதலை அளித்தல், வியத்தகு ஆலோசகர், அமைதியின் அரசர்.

(இவற்றில் ஏதாகிலும் 02)

IV. (அ) பெந்தகொஸ்தே பண்டிகை யூதருக்கு முக்கியமாவது ஏன் ?
(ஆ) கிறிஸ்தவர்களாகிய எமக்கு பெந்தகொஸ்தே தினம் முக்கியமாவது ஏன் ?

(அ) பெந்தகொஸ்தே பண்டிகை – அறுவடை விழா, முதற் பலனை கடவுளுக்கு கொடுத்தல்

(ஆ) கிறிஸ்தவர்களின் பெந்தகொஸ்தே பண்டிகை
தூய ஆவியின் வருகை, 3000 பேர் திருச்சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு திருச்சபை ஆரம்பமானது.
திருச்சபை பிறப்பு.

V. சதுசேயர் இயேசுவிடம் வினவிய **இரண்டு** வினாக்களையும் எழுதுக.

சதுசேயர் வினவிய வினாக்கள்
சீசருக்கு வரி செலுத்துவது முறையா, இல்லையா? உயிர்த்தெழுதல் பற்றிய வினா? எந்த அதிகாரத்தினால் செய்கிறீர்? (ஆலயத்தை தூய்மைப்படுத்தல்)

VI. (அ) இயேசுவானவரின் போதனைகளின் முக்கிய தொனிப்பொருள் என்ன?

(ஆ) அத்தொனிப்பொருளைப் போதிப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் அவர் எடுத்துக்கொண்ட ஒரு நடவடிக்கையைக் கூறுக.

(அ) போதனைகளின் முக்கிய தொனிப்பொருள் - இறையரசு
(ஆ) எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள்
போதனைகள், உவமைகள், அற்புதங்கள், அரமெய மொழிகளில் போதித்தல், சூழலைத் தொடர்புபடுத்துதல், இயேசுவின் செயற்பாடுகள்.

VII. இயேசுவின் தோற்றம் மாறுதலின்போது (மறுரூபம்) அவரின் இரு பக்கங்களிலும் தோன்றிய இருவரில் ஒருவரைப் பெயரிட்டு, அவர் இயேசுவுடன் உரையாடியது யாதெனக் குறிப்பிடுக.
இரு பக்கங்களிலும் தோன்றிய இருவர் - மோசே, எலியா
அவர்களோடு உரையாடியது, இயேசு எருசலேமில் அனுபவிக்கும் பாடு, மரணம் உயிர்ப்பு நியாயப்பிரமாணமும், இறைவாக்கும் பூரணமடைதலும், நிறைறேறுதலும்.

VIII. பவுல் திருப்பணியில் ஈடுபடும்போது கைக்கொண்ட சமயோசித செயல்கள் **இரண்டிற்கு** உதாரணங்கள் தருக.

பவுலின் சமயோசித செயல்கள்
எதென்சில் செயல்பட்ட விதம் அறியாத தெய்வத்திற்கு என்ற பலிபீடம், சூழலுக்கேற்றவாறு ஞானத்தோடு செயற்படுதல், இலக்கிய கவிகளின் மூலமாக தனது போதனைக்கு ஊக்கமூட்டினார். லீஸ்திராவில் கடவுளுக்களித்த மரியாதை, பாப்போவில் செர்க்கியு பவுலின் முன்னால் செயற்பட்ட விதம் விசாரணையின் போது பரிசேயத் தன்மையை வெளிப்படுத்தியது. உரோமைக் குடியுரிமை.

IX. 'மெய்யான திராட்சை' என்னும் உருவகத்தின் மூலம் இயேசுவானவர் முன்வைக்கும் **இரண்டு** போதனைகளும் நமது வாழ்விற்கு எவ்வாறு முக்கியமாகின்றன?
மெய்யான திராட்சை செடி
இயேசுவோடு தொடர்புகொள்வதன் முக்கியத்துவம் நற்பலன் கொடுப்பதற்கு இறைத் தொடர்பு அவசியமாகும். அவ்வாறு இல்லாவிட்டால் பலன் அளிக்காமையினால் இறையரசில் பங்கில்லை.

X. சமுதாய நீதியை முக்கியப்படுத்திய ஓர் இறைவாக்கினரின் பெயரையும் கடவுளின் பரிசுத்தத்தைப் பற்றிக் கூறிய ஓர் இறைவாக்கினரின் பெயரையும் முறையே பெயரிடுக.

நீதியை முக்கியப்படுத்திய இறைவாக்கினர் - ஆமோஸ்
கடவுளின் பரிசுத்தத்தைக் கூறிய இறைவாக்கினர் - ஏசாயா

(10 x 2 = 20 புள்ளிகள்)

2. ''உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி, அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக.''
(i) இயேசுவானவர் இவ்வசனத்தைக் கூறிய சந்தர்ப்பத்தைச் சுருக்கமாக விளக்குக.
(ii) இன்று எங்கள் மனதைக் கவரும் உலகம் சார்ந்த (லௌகீக) விடயங்கள் **மூன்றை** எழுதுக.
(iii) இவ்வாறான விடயங்களை வெற்றிக்கொள்ள கிறிஸ்தவர்களாகிய நாம் செயற்பட வேண்டிய விதத்தை விளக்கும் **ஐந்து** வழிமுறைகளை முன்வைக்க.

(i) நாற்பது நாள் உபவாசத்திற்குப் பின் இயேசுவுக்கு ஏற்பட்ட 2 ஆம் சோதனையின் போது

(ii) சொத்து, செல்வம், வலிமை, புகழ், அதிகாரம், வினோதமான செயல்கள், போட்டி, பொறாமை போன்ற சரியான விடைகளுக்கேற்ப 3ற்குப் புள்ளி வழங்கப்படும்.

(iii) கிறிஸ்தவர்களாகிய நாம் செயற்பட வேண்டியது ஆன்மீகக் காரியங்களில் அதிகமாக ஈடுபடுதல், ஜெபித்தல், இறைவார்த்தையை தியானித்தல், இறையரசின் குணங்களான அன்பு, தாழ்மை என்பவற்றைக் கடைப்பிடித்தல், போட்டிக்குப் பதிலாக பகிர்ந்து செயற்படுதல், பிறர் மத்தியில் சகோதரத்துடன் ஒன்றிணைந்து செயற்படுதல் போன்றவை.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

3. "இறையரசு உங்கள் மத்தியிலேயே உள்ளது." என்று இயேசு கூறினார்.

(i) மேற்கூறிய வசனத்திலிருந்து இறையரசைப் பற்றிய **இரண்டு** விடயங்களைச் சுருக்கமாக எழுதுக.

(ii) இறையரசின் பிரஜை ஒருவருக்கு இருக்க வேண்டிய **மூன்று** குணாதிசயங்களை முன்வைக்க.

(iii) கிறிஸ்தவரான நீர் இறையரசின் பிரஜை என்னும் வகையில் இறையரசின் விழுமியங்களை (மதிப்புக்களை) எவ்வாறு வெளிப்படுத்துவீர் என்பதை எடுத்துக்காட்டுவதற்கு **ஐந்து** உதாரணங்கள் தந்து விளக்குக.

(i) இறையரசைப் பற்றிய இரண்டு விடயங்கள், நல்ல குணாதிசயங்களை செயற்படுத்துபவர்கள் மத்தியில் இறையரசு நிலவுகின்றது. இதற்கு எல்லை இல்லை. இறைவன் ஆட்சி செய்கிறார். இறையரசு எல்லாருக்கும் திறந்திருக்கும், அரசு நிலையானது. வரைவிலக்கணம் எழுதியிருப்பினும் புள்ளி வழங்கப்படும்.

(ii) இருக்க வேண்டிய மூன்று குணாதிசயங்கள், மற்றவர்களுக்காக தம்மை அர்ப்பணித்து செயல்படும் குணாதிசயம், சேவக தலைமைத்துவம் அதாவது தாழ்மையுடன் செயற்படுதல் தமது திறமைகளைப் பயன்படுத்தி இறையரசை வளர்த்தல், இடத்திற்கேற்ற ஞானத்தோடு செயற்படுதல், இன, மத பேதமின்றி செயற்படுதல். மன்னிப்பு.

(iii) தலைமைத்துவம் கிடைப்பின் பிறருக்காக எம்மை அர்ப்பணித்தல், சமுதாயத்தில் உள்ள மக்கள் அனைவரும் ஒன்றே என ஏற்று செயற்படுதல் திறமைகளை இறையரசின் வளர்ச்சிக்காக பயனுள்ள விதத்தில் செயற்படுத்தல், இன, மத, குல பேதமின்றி பன்மைச் சமூகத்தில் அனைவருக்காகவும் செயற்படுதல், தேவையில் உள்ளவர்களுக்கு எப்போதும் வரையறை இன்றி செயற்படுதல். சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தீர்க்கமான அறிவினாலும் ஞானத்தினாலும் செயற்படுதல்.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

4.

(i) இயேசுவானவரின் அற்புதச் செயல்களை எந்தெந்தப் பிரிவுகளில் வகைப்படுத்தலாம் ?

(ii) அப்பிரிவுகளில் **மூன்றைத்** தெரிவுசெய்து, அவை ஒவ்வொன்றின் மூலமும் இயேசுவானவரின் அதிகாரம் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டதென்பதைக் காண்பிப்பதற்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

(iii) நீர் அல்லது நீர் அறிந்த ஒருவர் அனுபவித்த ஓர் அற்புதத்தைக் குறிப்பிட்டு, அதன் மூலம் ஒருவருக்குள் இறையரசு பற்றிய எவ்வாறான துலங்கல்கள் (பிரதிச்செயல்கள்) இருக்க வேண்டுமென இயேசு எதிர்பார்க்கிறார் என்பதை விளக்குக.

(i) இயேசுவின் அற்புதச் செயல்களின் பிரிவுகள்
சுகமளித்தல், அசுத்த ஆவியை விரட்டுதல், இயற்கைக்கு மேலான வல்லமை, மரித்தோர் உயிர்பெறல்.

(ii) சுகமளிக்கும் வல்லமை

குருடர், செவிடர், முடம் தொழுநோய்.... போன்ற நோய்கள் (முடக்குவாதக்காரன் சுகம் பெறுதல், நூற்றுக்கதிபதியின் பணியாளன் சுகம் பெறுதல்)

மரித்தோரை உயிர்பெறச் செய்தல்.
யவீருவின் மகளை மரணத்திலிருந்து உயிரோடு எழுப்புதல்
நயீன் ஊர் விதவையின் மகனை உயிரோடு எழுப்புதல்
லாசருவை உயிரோடு எழுப்புதல்

இயற்கைக்கு மேலான வல்லமை
புயலை அடக்குதல், ஐயாயிரம் பேரை போசித்தல், கடலின் மீது நடத்தல், தண்ணீரை இரசமாக்குதல், நாலாயிரம் பேரை போசித்தல்.

அசுத்த ஆவியை விரட்டுதல்
கெரசனேர் பகுதியில் தீய ஆவி பிடித்தவர். தொழுகைக் கூடத்தில் தீய ஆவி பிடித்தவர், ஊமை, செவிடு.

(iii) மாணவர்கள் எழுதிய அனுபவத்தின் அற்புதங்கள்
அற்புதங்கள் ஊடாக வாழ்வில் ஏற்பட்ட மாற்றம் பிரதிச் செயல்கள், விசுவாசம், நம்பிக்கை (இன்று அவரின் செயற்பாடு குறிப்பிடுவது அவசியமாகும்)
அற்புதம் எழுதியிருப்பின் 02 புள்ளி
கருத்துக்கள் எழுதியிருப்பின் 03 புள்ளி

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

5.

(i) ‘‘பொன்னும் வெள்ளியும் என்னிடமில்லை,.... இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும்’’
(அ) இவ்வாறு கூறியது யார் ?
(ஆ) இதன் பின்னணி என்ன ?

(ii) அவ்வேளையில் சுகமடைந்த நபர் முழுமையான சுகத்தைப் பெற்றுக்கொண்டார் என்பதற்கு அவரின் எச்செயல்கள் சாட்சியாகின்றன?

(iii) இச்சம்பவத்தைப் போன்று இதற்குச் சமனான ஒரு சவாலுக்கு நீர் காண்பிக்கக்கூடிய வெவ்வேறு துலங்கல்களை (பிரதிச்செயல்களை) விளக்குக.

(i)
அ. பேதுருவால் கூறப்பட்டது
ஆ. அழகு வாயில் அண்டையில் அமர்ந்திருந்து பிச்சைக் கேட்டுக் கொண்டிருந்த பிறவி முடவனுக்கு காட்டிய பிரதிச் செயலானது அவனைக் குணப்படுத்தி நடக்கச் செய்தது.

(ii) ஆண்டவரைத் துதித்தார், நடந்து சென்றார், ஆலயத்திற்கு வெளியே இருந்தவர் இப்போது ஆலயத்திற்கு உள்ளே செல்கிறார் இயேசுவின் வல்லமையை அறிந்து அவரைப் பின்பற்றினார்.
துதித்தலும் நடத்தலும் எழுதியிருந்தால் மாத்திரமே முழுபுள்ளி வழங்கப்படும்.

(iii) கடவுளின் வழிநடத்துதல் மூலமாக பிறருக்கு உதவி செய்ய முன்வருதல்.
லௌகீக செல்வங்களை விட ஆன்மீக இலாபத்தைக் கொடுத்தல்.
நாம் நினைப்பதற்கு மேலாக கடவுள் செயல்படுகிறார்.
வாழ்வில் பல்வேறு விதமான மாற்றங்கள் ஏற்படுகின்றது.
எதிர்ப்பார்ப்போடு செயற்படுதல், ஜெபித்தல், விசுவாசத்தோடு கேட்பதைப் பெற்றுக் கொள்ளுதல்.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

6. ‘‘இன்று நாம் வாழ்வது ஒரு பன்மைச் சமுதாயத்திலாகும்’’.
   (i) பவுல் தமது மூன்றாவது திருத்தூதுப் பயணத்தின்போது எபேசு நகரில் எதிர்கொண்ட வெவ்வேறு சமய நம்பிக்கைகள், கொள்கைகள் யாவை?
   (ii) எபேசுவில் காணப்பட்ட இவ்வாறான சமய நம்பிக்கைகள், கொள்கைகள் ஆகியன ஏற்படுத்திய சவாலின் மத்தியில் பவுலின் துலங்கல்கள் எவ்வாறு அமைய வேண்டும்?
   (iii) மேற்படி நிலைமைகளின்போது பவுல் காண்பித்த துலங்கல்களுக்கு ஏற்ப இன்று இலங்கையில் நீர் காணும் அவ்வாறான நிலைமைகளுக்கு உமது துலங்கல்கள் எவ்வாறு அமைய வேண்டும்?

(i) மந்திர தந்திரங்கள் செய்தல், சிலை வழிபாடு, குறி பார்த்தல், பேயோட்டுதலுக்கான வழிமுறைகளைத் தேடுதல், திருமுழுக்கு யோவானின் திருமுழுக்கை மட்டும் பெற்றவர்கள்.

(ii) சிலை வழிபாடு
‘‘மனிதக் கையால் செய்யப்பட்டவை தெய்வங்களல்ல’’ என பவுல் போதித்தமை இதனால் அர்த்தமி கோவிலின் வடிவத்தை செய்வித்து வியாபாரம் செய்தவர்களின் வருவாய் தடைப்படுதல்.

பேயோட்டுதல்
ஸ்கோவின் ஏழு குமாரனின் முயற்சி வீணாகுதல், இயேசுவின் நாமத்தினால் தீய ஆவியை விரட்டுதல்.

மந்திர வித்தைகள்
இதில் நம்பிக்கை கொண்டோர் தமது மந்திர நூல்களை மனந்திரும்பிய பின் எரித்தனர். யோவானின் திருமுழுக்கை மட்டும் அறிந்த விசுவாசிகள் தூய ஆவியின் வரத்தைப் பெற்றனர்.

(iii)சிலை வழிபாட்டை விட்டு கடவுளை வழிபட வேண்டும்.
தீமையானவைகளை அகற்றி நல்வழிக் காட்டுதல்
ஆவியானவர் மூலமாக கடவுளின் வல்லமையை பெறுதல்
தூய ஆவியின் திருமுழுக்கைப் பெற ஆயத்தப்படுத்தல்.
தீய வழியில் செல்லும் நபர்களை உண்மையாக வழிநடத்தி அவர்களுக்கு உணர்த்தி அவர்களுக்காக ஜெபித்தல்.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் **இரு** தலைப்புக்களைத் தெரிவுசெய்து, அவற்றிற்கு திருமறையின் உதாரணங்களுடன் சிறுகுறிப்பு எழுதுக.
   (i) இன்றைய திருச்சபைகளுக்கு ஆதித் திருச்சபையின் பெறுமதிகளின் முக்கியத்துவம்
   (ii) கிறிஸ்தவத் திருமுழுக்கு
   (iii) சமாதானத்திற்கு அர்ப்பணிப்போம்
   (iv) எருசலேம் சங்கம்

**(i) ஆதித் திருச்சபையின் பெறுமதிகள்**
அனைத்தையும் பொதுவாக வைத்தனர். அனைவரும் ஒற்றுமையாக செயற்பட்டனர். உபவாசமாய் இருந்து ஜெபித்தனர். இறைவார்த்தையைப் போதித்தனர். வீடுகள் தோறும் சென்று அப்பம் பிட்டு கூட்டுத் தலைமைத்துவத்துடன் செயல்பட்டனர். தூய ஆவியின் வழிக்காட்டலைப் பெற்று இன்றைய திருச்சபைகளில் தூய ஆவியின் வழிக்காட்டலைப் பெற்று ஒற்றுமையாக செயற்படுவது அவசியமாகும். இடைவிடாமல் ஜெபித்து ஆண்டவரை மகிமைப்படுத்தல் தேவைகளை அறிந்து நிறைவேற்றுதல், நட்புறவை வளர்த்துக் கொள்வதன் அவசியம் நலன்புரி செயல்களின் மூலம் எம்மை சமுதாயத்திற்கு அர்ப்பணித்தல்.

**(ii) கிறிஸ்தவ திருமுழுக்கு**

நீரில் மூழ்குவது வெளிப்படையான அடையாளம். இதன் மூலம் தூய ஆவியைப் பெறுகின்றோம் என்பது கிறிஸ்தவ விசுவாசம். இது முழு வாழ்விலும் ஒளியாகின்றது. புது வாழ்வை நோக்கி செயல்படுகிறோம். பயமின்றி தைரியமாக ஏற்ற வேளையில் கிறிஸ்தவனாக ஆண்டவருக்காக, சான்று பகர்தல் திருச்சபையின் அங்கத்தவராகுதல் கிறிஸ்துவின் மரணத்திலும் உயிர்ப்பிலும் பங்கேற்றல்.

**(iii) சமாதானத்திற்கு அர்ப்பணிப்போம்**

இயேசு சமாதானக் குமாரன் அவர் இவ்வுலகில் வந்த போது வான தூதரின் செய்தியானது கடவுளுக்கு மாட்சியும் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக என கூறப்பட்டது. அமைதியை ஏற்படுத்துவோர் இறைவனின் மக்களாவார் என இயேசு கூறினார். மீக்கா இறைவாக்கினர் இயேசுவின் வருகையுடன் யுத்தமில்லா சமாதானம் நிலைநாட்டப்படும் என்றார். கடவுளின் பிள்ளைகளாகிய நாம் வசிக்கும் இல்லம், பாடசாலை, சமுதாயம் என்பவற்றில் காணப்படும் பிரச்சினைகள் மத்தியில் சமாதானத்தை உருவாக்க செயற்படுவோம். (சமாதானத்தைக் குறித்து எழுதிய சரியான விடைகளுக்கும் உதாரணங்கள் எழுதியிருந்தாலே முழுப்புள்ளி வழங்கப்படும்)

**(iv) எருசலேம் சங்கம்**

இது பவுலின் முதலாம் தூதரைப் பணியின் பின் நிகழ்ந்தது. யூத கிறிஸ்தவர்களுக்கும் பிற இன கிறிஸ்தவர்களுக்கும் இடையில் விருத்தசேதனம் போன்ற வேறுபாடுகள் பற்றி ஆலோசிக்கப்பட்டது. இதற்கு யாக்கோபு தலைமைத்துவம் வகித்தார். பேதுரு, பவுல் போன்றோர் பிற இன கிறிஸ்தவர்களுக்காக குரல் கொடுத்தனர். பிற இனத்தவரை விருத்தசேதனம் இன்றி ஏற்றுக்கொள்ளுமாறும் சிலைகள் தொடர்பான தீட்டானவற்றை தவிர்ப்பது பற்றியும் பரத்தமைக்கு விலகுதல் பற்றியும் கழுத்து நெறிக்கப்பட்டு இறந்த உயிரினங்களின் இறைச்சியை தவிர்த்தல் பற்றியும் மிருக இரத்தத்தை உண்ணக்கூடாது என்பது எடுக்கப்பட்ட தீர்மானங்களாகும். இதன் மூலம் திருச்சபையானது பிரிவு படாமல் நல்ல தொடர்பினை கட்டியெழுப்புவதற்கு முயன்றனர்.

(5 + 5 = 10 புள்ளிகள்)